CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
அருளுரை

தொகுப்பு—53

நமது பழம்பெரும் பண்பாடு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி சங்கராசார்ய
மஹாஸ்வாமிகளின் அருளுரை

தொகுப்பு-53

நமது பழம்பெறும் பண்பாடு

வெளியிடுவோர் :

ஸ்ரீ சாரதா டிரஸ்ட்,
பாரதி தெரு, சிருங்கேரி-577 139.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

விலை ரூ. 1-50

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Copies can be had from :

The Publication Manager,
Sri Sharada Trust,
(Madras Office)
Sri Sringeri Math Buildings,
No. 11, Venkatnarayana Road,
MADRAS-600 017.
Phone No. : 442041

Printed at :

Commonwealth Press,
4, Pitchu Pillai Street,
Mylapore, Madras-600 004.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸன்னிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன்னுரை

நம் ஆசார்யாளான சிருங்கேரி ஜகத்குரு அவர்கள் பெங்களூரில் அமைக்கப் பெற்றுள்ள ஸரஸ்வதி சபையின் பத்தாம் ஆண்டு விழாவின்போது அருளுரையொன்றை வழங்கினர். பதினெண்கு வித்யைகள் எவையெவை என்பதை விளக்குகிறார் ஜகத்குரு. பிறகு நமது கலாச்சாரத்தில் எல்லா விதமான கல்விகளும் இருந்து வந்திருக்கின்றன என்பதை நிரூபிக்கிறார் ஆசார்யாள். இத்தகைய பழமையான நூல்களையெல்லாம் படித்துப் பொருளுணர்வதற்கு சமஸ்கிருத மொழியானது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தும் நம் குருநாதர் சமஸ்கிருத மொழி மற்ற எல்லா மொழிகளுக்கும் தாயைப் போல் விளங்குகிறது எனக் கூறுகின்றார். கன்னடத்தில் வழங்கப் பெற்ற இவ்வருளுரையைத் திரு. வி. சுப்ரமணியன் அவர்கள் மொழி பெயர்க்க, திரு. கோ. இராமசுப்ரமணியன் வரிவடிவாக்கம் செய்துள்ளார். இவ்வருளுரை ஸ்ரீ சாரதா டிரஸ்ட் வெளியிடும் ''ஆசார்யாளின் அருளுரைகள்'' என்னும் தொகுப்பில் 53-வதாக விளங்குகிறது.

இப்படிக்கு,

இரா. மு. உமேஷ்,
ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
பத்திரிகைச் செயலாளர்.

பெங்களூர்
10-6-1984

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நமது பழம்பெரும் பண்பாடு

சரதிந்துவிகாஸிமந்தஹாஸாம்
ஸ்புரதிந்தீவரலோசனபிராமாம் |
அரவிந்தஸமானஸுந்தராஸ்யாம்
அரவிந்தாஸனஸுந்தரீமுபாஸே ||

மனிதனுக்கு ஏதைப் பார்த்தாலும் ''இதில் என்ன உள்ளது?'' என்று தேடும் ஸ்வபாவம் உண்டு. இதன் முன் என்ன இருந்தது என்றும் இன்னும் கொஞ்சம் புத்திசாலி யாய் இருந்தால் இனிமேல் என்னவாகும் என்று யோசனை செய்யும் ஸ்வபாவமும் உண்டு. இம்மூன்றில் ''என்ன இருக் கிறது?'' என்று பார்ப்பது சகஜம். கொஞ்சம் முன்னேறி யவன்தான் முன்னுல் என்ன இருந்தது என்று யோசனை செய் வான். உதாரணமாக பெங்களூருக்கு வந்தால், ''இந்த ஊரானது 40 வருடங்களுக்கு முன்னுல் எப்படி இருந்தது'' என்று தெரிகிறது. 400 வருடங்களுக்கு முன்பும், எப்படி இருந்தது என்றும் தெரிகிறது. 4000 வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தது என்று யாரும் யோசனை செய்வதில்லை. ஏனென்ருல் நம் புத்தி அவ்வளவு தூரம் செல்லவில்லை. செல்வதாயிருந்தால் நாம் யோசனை செய்திருப்போம்.

நாம் ஏதோ ஒரு உடை உடுத்திக் கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு திலகத்தை நெற்றியில் இட்டுக் கொண்டிருக் கிறோம். ஏதோ ஒரு பேச்சு பேசிக் கொண்டிருக்கிறோம். நாம், ''நம் பாட்டனுர் எப்படி இருந்தார்? அவருடைய பாட்டனுர் எப்படி இருந்தார்? அவருடைய மூதாதையர் எப்படி இருந்தனர்? 1000 வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தனர்? 2000 வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தனர்? அதற்கும் முன்னுல் எப்படி இருந்தனர்?'' என்றபடி எண்ணத்தை ஓடவிட்டுக்கொண்டேயிருக்கிறோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''உத்பத்யந்தே விலீயந்தே தரித்ராணும் மனோரதா: |''

(ஏழைகளின் மனக் கோட்டைகள் உயர்ந்தும் பிறகு சரிந்தும் விடுகின்றன.)

ஆனால் விவேகியானவன் எண்ணத்தை அவ்வளவு தூரத்திற்குச் செல்லவிட மாட்டான். அடம் பிடித்தாவது எண்ண ஓட்டத்தைத் தடுக்க முற்படுவான். அதைச் சாதிக்க வேண்டுமானால் அவனுக்கு ஓர் அடிப்படை என்பது வேண்டும். அடிப்படையேயில்லாமல் ஆகாயத்தில் வீடு கட்ட யாராலும் முடியாது. வீடு கட்ட வேண்டுமானால் கெட்டியான நிலம் வேண்டும். அதே போல நமக்கு, ''நாம் யார்? எப்படியிருந்து எப்படியாகிவிட்டோம்?'' என்று தெரிந்துகொள்ள சில உபகரணங்கள் வேண்டியிருக்கின்றன.

நம் சரித்திரம் எங்கிருக்கிறது என்று கேட்டால் நம் சரித்திரம் நம் பள்ளிக்கூட நூல்களிலிருந்து நமக்குத் தெரிகிறது. ''இப்படித் தெரியும் சரித்திரத்தை எதைப் பார்த்து எழுதியிருக்கிறார்கள்?'' என்பது மற்றொரு கேள்வி. ஏனென்றால் சரித்திரத்தை எழுதியவனும் நம்மைப் போல் மனிதன் தான். அவனுக்கு தேவலோகத்தில் இருந்து வந்து யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. அவனே பார்த்து எழுதினான். அவன் எதைப் பார்த்து எழுதினான்?

''அங்காநி வேதாச்சத்வார:
மீமாம்ஸான்யாயவிஸ்தர: |
புராணம் தர்மசாஸ்த்ரம் ச
வித்யாஹ்யேதாச்சதுர்தச ||''

(வேதத்தின் (ஆறு) அங்கங்கள், நான்கு வேதங்கள், மீமாம்ஸா, நியாயம், புராணம் மற்றும் தர்ம சாஸ்திரம்— இவையே பதினான்கு வித்யைகள்.)

என்று ஒரு மேற்கோள் வழக்கில் உள்ளது. இது இவ்வளவுடன் நின்றுவிடவில்லை. இன்னும் அதிகம் இருக்கிறது. நாம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்னவாக இருந்தோம் என்று ஆராய்கையில் முதன்முதலில் 'வேதா:' என்ரூர். அது என்னவென்ரூல் 'வேதங்கள்' என்று தெரிகிறது. அவைகளிலும் சில ஆயிரக்கணக்கிலும் சில நூற்றுக்கணக்கிலும் (கிளைகள்) உண்டு. அவைகள் எல்லாவற்றையும் பார்ப்பதற்கு இயலாது. கிடைத்த வரையில் பார்க்கலாம். ஆனல் அவ்வளவு புராதனமாக உள்ளவற்றைப் பார்த்தால் நமக்குப் பொருள் விளங்குவதே மிகவும் கடினம். பழைய காலத்தில் உள்ள கன்னட புத்தகத்தைப் பார்த்தால் நமக்கு ஒன்றும் புரிவதில்லை. அவைகளை எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்பதைச் சிலர் எழுதி வைத்திருக்கிரூர்கள். அதற்கென்று ஒரு இலக்கண நூல் உண்டு. அந்த நூலை முதலில் படித்துக் கொண்டால் மிகவும் உபயோகமாக இருக்கும். அப்படியே இதற்கு (அதாவது புராதனமாக உள்ள வேதங்களுக்கு) ''அங்கானி'' என்பதும் கூறப்பட்டதுள்ளது. சிக்ஷா, சந்தம் வியாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம் மற்றும் கல்பம் ஆகியவையே அங்கங்கள் ஆகும். இவற்றையெல்லாம் பார்த்து நான்கு வேதங்களுக்கும் அர்த்தத்தைச் சிறிதளவாவது புரிந்துகொள்ள முடியும் எனத் தெரிகிறது. இவையில்லாமலிருந்தால் சிலர் வேதத்திற்குத் தவருகவும் பொருள் புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

''க்ருஷ்ணலம் ச்ரபயேத்'' என்று வேதத்தில் ஓரிடத்தில் வருகிறது. அதாவது ''ச்ரபயேத்'' என்ரூல் ''வேக வைக்க வேண்டும்'' என்று பொருள். இது சாதுர்மாஸ்யத்தில் யாகம் செய்யும் சமயம் கர்மாக்களின்போது வரும் என்பர். 'க்ருஷ்ணலம்' அதாவது 'கருப்பு இலை கொண்டு வந்து வேக வைத்து விடுங்கள்' என்ரூர் ஒருவர். வேக வைத்து என்ன செய்வது என்ரூல் அதை சாப்பிட்டு விடுங்கள் என்ரூர். ஆனல் அந்த வார்த்தைக்குப் பொருள் அதுவல்ல. யாகத்தைச் செய்பவன் தங்கத்தால் ஆன குண்டலங்களை அணிந்திருப்பான். தங்கத்தால் ஆன குண்டலங்கள் என்ரூல் நாம் ஏதாவது தங்கத்தை வாங்கி தட்டானிடம் கொடுத்து குண்டலங்கள் செய்தால் அவை குண்டலங்கள் ஆவதில்லை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவை பார்ப்பதற்கு மட்டும் ஏதோ குண்டலங்கள் போல் இருக்கும்; அவ்வளவுதான். (இதைப் பற்றிய விளக்கத்தைக் காண்பதற்கு முன் ஒரு சில அடிப்படை விளக்கங்களைக் கவனிப்போம்.)

எந்தக் காரியத்திலும் த்ருஷ்டம், அத்ருஷ்டம் என்று இரண்டு பிரயோஜனங்கள் உண்டாகின்றன என்று நம் சாஸ்திரம் கூறுகின்றது. த்ருஷ்டம் என்பது கண்ணிற்கு தெரிவது. அத்ருஷ்டம் என்பது கண்ணிற்கு தெரியாதது என்று சொல்லப்படுகிறது. மீமாம்ஸகத்தில் ஓரிடத்தில், தர்ம பத்தினியாக இருப்பவள் நெய்யைப் (பசும் நெய்யை) பார்க்கவேண்டும் என்று ஒரு விதானம் (முறை) செய்திருக்கிறார்கள். ''நெய்யைப் பார்ப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது. பார்த்தாலும் ஒன்றுதான் பார்க்காவிட்டாலும் ஒன்றுதான். நெய்யை ஹோம குண்டத்தில் கொட்ட வேண்டியதுதானே! நெய்யை எதற்குப் பார்க்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம். நெய்யில் தலறுதலாக அதில் ஏதோ கரப்பான் பூச்சி விழுந்திருக்கிறது என்றால் அதையும் அப்படியே அக்னியில் போட்டுவிட்டால், ''ஐய்யய்யோ! எத்தகைய பாவ கார்யம் செய்து விட்டோம்'' என்று மனது துக்கப்படுமே! (அதற்காக அதைப் பார்த்து விடுவதில் தவறொன்றுமில்லை.) முதலிலேயே பார்த்துவிட்டிருந்தாலும் அப்பொழுதும் ஒரு முறை பார்க்கத்தான் வேண்டும். (அதுதான் விதி.)

தினமும் ஸ்நானம் செய்ய வேண்டும் என்ற நியமத்தை நாம் கடைப்பிடிக்கிறோம். சிலர், ''ஸ்நானம் எதற்குச் செய்ய வேண்டும்'' என்று கேட்கலாம். ''ஐயோ! விபர்வையைப் போக்குவதற்கு ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்று நாம் கூறினால் ''குளிர்காலம் என்றால் ஸ்நானம் செய்ய வேண்டியதில்லை'' என்று சௌகரியமான பதில் நமக்குக் கிடைக்கும். மேலும் குளிர் காலத்தில் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டுமானால் ஸ்நானம் செய்யவேண்டியதில்லை என்றும் ஆகிவிடும். ஸந்த்யாவந்தனம்

CC-O. Vidyabharathi Trust Collection. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்யவேண்டுமென்றுல் ஸ்நானம் செய்தே ஆக வேண்டும். ஏனென்றுல் வியர்வையாக இருக்குமே. வியர்வையைப் போக்க ஸ்நானம் செய்தே ஆக வேண்டும்'' என்று முடிவை வைத்துக்கொண்டிருந்தால் யாரும் ஸந்த்யாவந்தனம் செய்யும் முன் ஸ்நானமே செய்ய மாட்டார்கள். ஏனென்றுல் ''குளிர் காலத்தில் எனக்கு வியர்வையே வரவில்லை. அதனுல் ஸ்நானம் செய்யவில்லை'' என்பான் ஒருவன். இதைச் சரி பார்க்க அவனுடைய உடம்பில் வியர்வை இருக்கிறதா? இல்லையா? என்று பார்க்கப் போகிறோமா? ஸ்நானம் செய்வதினுல் ஏற்படும் ஒரு பிரயோஜனம் வியர்வை போவது. ஆனுல் ஸ்நானம் செய்தால் புண்ணியம் உண்டு என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்தப் புண்ணியம் வந்த பிறகு நாம் ஸந்த்யாவந்தனம் செய்தால் இன்னும் பெரிய புண்ணியம் கிட்டும். முதலில் சிறு புண்ணியம் வரவேண்டும். சிறு புண்ணியம் வராமல் பெரிய புண்ணியம் வராது. அதனுல் புண்ணியத்திற்காகவே ஸ்நானமா? என்று கேட்டால், ஆமாம்! அதன் பலன் அவ்வளவுதான். (வியர்வையும் துர்நாற்றமும் போகின்றன என்பது தானுக வரக்கூடிய பலன்.) ஆபஸ்தம்பர் ஓரிடத்தில் மிகவும் சுவாரஸ்யமாகக் கூறியுள்ளார்.

''தத்யதாம்ரே பலார்தே நிர்மிதே சாயா கந்த
இத்யனூத்பத்யேதே |
ஏவம் தர்மம் சர்யமாணமர்தா அனூத்பத்யந்தே ||''

(கருத்து : மாங்கொட்டையை நடுவதினுல் (மாங்கனியோடு) நிழலும் மணமும் எவ்வாறு கிடைக்கின்றனவோ அதே போல் தர்மத்தைக் கடைப்பிடிப்பதனுல் அர்த்தமும் (பொருளும்) காமமும் (இன்பமும்) கிடைக்கின்றன.)

மாங்கொட்டையை நடும்போது ''நிறைய இலைகள் கிடைக்கட்டும். அதிகமான நிழல் தரட்டும்'' என்று எண்ணுவதில்லை. நல்ல ஜாதியான மாங்கொட்டையை நடும் போது, ''நல்ல உயர்ந்த ஜாதிப் பழங்கள் கிடைக்கட்டும்''

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்ற எண்ணம்தான் மனதில் இருக்கும். நம் உத்தேசம் அது வாக இருந்தாலும் நல்ல சுகந்தமும், நல்ல புஷ்பங்களும் நல்ல இலைகளும் கூட தானாகவே கிடைக்கின்றன. பலன் எனப்படுவதுதான் புண்ணியம்.

சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கார்யங்களை செய்ய வேண்டும் என்ற உத்தேசத்துடன் செய்யும்போது நமக்கு புண்ணியத்தோடு இதர சௌகர்யங்களும் கிடைத்துப் போகின்றன. தூய்மையோடு ஸந்த்யாவந்தனத்தைச் செய்து விட்டால் கூடவே வியர்வையின் அழிவும் ஏற்பட்டு விடு கிறது. ஆனால் வியர்வை போக வேண்டும் என்ற உத்தேசத் துடன் மட்டும் ஸ்நானம் செய்து விட்டால் குளிர்காலத்தில் ஸ்நானமே இல்லாமல் போய்விடும். ஆனால் அப்படி ஆகக் கூடாது. ''எப்பொழுதும் ஸ்நானம் செய்ய வேண்டியது'' என்பதுதான் ஸித்தாந்தம். ஒவ்வொரு கர்மாவிற்கும் இவ் வாறு பிரயோஜனங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு சொல்லியிருக்கும்போது நாம் 'க்ருஷ்ணத்திலம் சீர்பயேத்' என்று, 'க்ரஷ்ணலம் ச்ரபயேத்' என்று சொல்லுமிடத்தில் சொல்லிவிட்டால் பொருளே வேறுமாதிரியாகிவிடும். கோதுமை போன்ற வடிவத்தில் தங்கத்தால் செய்து இருப் பார்கள். அதை நெருப்பின் மேல் வைத்து வறுத்ததைப் போல் பாவனை செய்ய வேண்டும். கோதுமை போன்ற வடிவத்தில் இருக்கும் ஸ்வர்ணத்திற்கு ''க்ருஷ்ணல'' என்று பெயர். நன்கு படித்துத் தெரிந்து கொண்டவனுக்கு 'ஸ்வர்ணகலா' என்றால் ஸ்வர்ணத் துண்டுகள் என்று தெரி யும். இது ஒரு ஸம்ஸ்காரமாகும். இந்த ஸம்ஸ்காரத்தினால் செய்யப்பட்ட அந்த ஸ்வர்ணத் துண்டுகளை நாம் அணிந்து கொண்டால் அதனால் சில விசேஷங்கள் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. சிலர் ''இதனால் என்ன விசேஷங்கள் இருக்கப் போகிறது. தட்டான் முதலிலேயே அந்தத் தங்கத் தைச் சுட வைத்துப் பின் கரைய வைத்து விட்டான். நீங்கள் ஏன் அந்தத் தங்கத்தை உருக்குகிறீர்கள்'' என்று கேட்க லாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். நான் உங்களுக்கு ஒரு தங்க மோதிரத்தைக் கொடுக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்துக் கொள்கிறீர்கள்! அதே சமயம் நீங்கள் கடைத் தெருவில் ஒரு மோதிரத்தை வாங்கி வந்தால் அதை எவ்வாறு வைத்துக் கொள்வீர்கள். இதைப் பார்க்கையில், ''ஏ! இது ஸ்வாமிகள் கொடுத்த மோதிரம் அல்லவா? அதனுல் அழகாக உள்ள இம் மோதிரம் எவ்வளவு விசேஷமானது! நாம் மிகவும் கவனத் தோடு வைத்துக்கொள்ள வேண்டும். இதனுல் நமக்கு எப் பொழுதும் செயல்களில் வெற்றி கிட்டும்; ரக்ஷையாகவும் இருக்கும்'' என்ற எண்ணம் உண்டாகிறது. அதே நேரத்தில் கடைவீதியில் வாங்கி வந்த மோதிரத்தை பார்த்தால் மிக அழகாக இருக்கிறது என்ற பாவனை மட்டும்தான் உண்டா கிறது. இந்த இரண்டு பாவனைகளுக்கும் உள்ள வேறுபாடு களைப் பார்த்தீர்களா? (ஆகவே வேதத்தில் சொன்னபடி நாம் குறிப்பிட்ட ஸம்ஸ்காரங்களைச் செய்தால்தான் நமது செயல் களுக்கு ஏற்ற பலன் கிட்டும்.) ஆதலால் வேதத்திற்கு பொருள் கொள்ளும்போது, ''எனக்குத் தோன்றியபடி அர்த்தம் செய்து கொள்கிறேன்'' என்று யாரும் செய்யக்கூடாது. இதி லிருந்து நாம் செய்துகொள்ளும் அர்த்தம்தான் சரியானது என்று நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். அடுத்ததாக சுலோ கத்தில்

''மீமாம்ஸா''

என்று கூறப்பட்டுள்ளது. மீமாம்ஸை என்று ஒன்று இருக் கிறது. எந்த வேத வாக்கியத்திற்கு எந்த அர்த்தம் சொல்ல வேண்டும் என்ற நியமம் இருக்கிறது. நாம் மேலோட்டமாகப் பார்க்கிறபோது நமக்குத் தெரிகிற அர்த்தமே வேறு. அது ஏன் அப்படி ஆகிறது என்றுல் நமக்கு வேத பரம்பரையே சிறிது சிறிதாக விட்டுப் போய்க்கொண்டு வருகிறது. இப் பொழுது இந்த மீமாம்ஸையைப் பார்த்துத்தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஆனுல் யக்ஞங்களைப் பற்றித் தெரிந்தவர்களாக இருந்துவிட்டால் அவர்களுக்கு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இப்படிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்களுக்குத் தானாக அர்த்தம் ஆகக் கூடிய அறிவு இருக்கிறது.

அடுத்ததாக,

''ந்யாயவிஸ்தர:'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை கணாத மஹரிஷிகள், கௌதம மஹரிஷிகள் என்ற இருவர் சேர்த்து செய்தனர்.

அடுத்ததாக

''புராணம்''

என்று கூறப்பட்டுள்ளது.

புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள் ஆகியவையும் சேர்த்து சதுர்தச வித்யைகள் என்று கூறப்பட்டன. நாம் நம்மையே தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், இவைகளை எல்லாம் அத்யயனம் செய்தே ஆக வேண்டும். நாம் முன்பு என்னவாக இருந்தோம்? காட்டு மிருகங்களாக இருந்தோமா? நாகரிகர்களாக இருந்தோமா? அசுரர்களாக இருந்தோமா? நம் பாவனைகள் எல்லாம் ஆத்யாத்மிகமாக இருந்தனவா? ஆதி பௌதிகமாக இருந்தனவா? ஆதிதைவீகமாக இருந்தனவா? என்று நாம் நிர்ணயித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் சாஸ்திரத்தின் அத்யயனம் என்பது அவசியமாகத் தேவைப்படுகிறது.

புராதனமான வித்யைகள் எவ்வளவு இருந்தன என்று யாராவது பரிசோதனை செய்து பார்க்கிறார்களா? ஏதாவது ஒரு நூல் நிலையத்திற்குச் சென்று பார்த்தால் அங்கே புத்தகங்களையெல்லாம் பட்டியல் போட்டு வைத்திருக்கிறார்கள். (அவற்றிலெல்லாம் தேடினால் பல புத்தகங்கள் கிடைக்கும்.) சில்ப சாஸ்திரம் என்பதும் ஒரு வகையான கலையாகும். இப்பொழுது நாம் ஒரு பெரிய சில்ப சாஸ்திரத்தைச் சுருக்கி செய்து அதற்கு Engineering என்று பெயர் கொடுத்திருக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிறோம். இதில் சந்தேகமில்லை. ''முன்னுலிருந்த சில்ப சாஸ்திரம் இன்று எத்தகைய நிலையை வகிக்கிறது? தஞ்சை பெரிய கோயிலைப் பார்த்தவுடன் எத்தகைய மஹா சில்பி என்று நாம் தலையைத் தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது! ''எவ்வளவு உயர்ந்த விமானம்! அத்தகைய விமானத்தைத் தாங்கவேண்டுமானுல் எத்தகைய உறுதியான அஸ்திவாரம் போட்டிருக்க வேண்டும்! அத்தகைய விமானத்தில் உள்ள கற்களைப் பார்த்தால், ''Crane'' இல்லாமல் எவ்வாறுதான் சாத்தியமாயிற்றோ? என்ற விஷயங்களை நம்மால் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. (சிருங்கேரியில் உள்ள வித்யா சங்கரர் கோயிலைப் பார்த்தால் அதன் மேல் உள்ள கல்லை ''எப்படித்தான் எடுத்துப் போயினரோ'' என்று தோன்றும். சாரங்களைக் கட்டி சாரங்கள் மேல் வழியாக எடுத்துப் போயிருக்கலாம். ஆனுலும் கீழேயுள்ள நிலம் மிருதுவானதா? கடினமானதா? என்றெல்லாம் அவர்கள் எவ்வாறு ஆராய்ந்தார்கள் என்பது நமக்குத் தெரிவதேயில்லை. எத்தகைய நுட்பமான உளிகளை அவர்கள் உபயோகித்தார்கள் என்பதையெல்லாம் பற்றிச் சிந்திப்பதே கஷ்டமாக இருக்கிறது. இவையெல்லாம் 600—700 வருடங்கள் முன்னுல் நடந்த காரியங்கள். இவ்வளவு நுணுக்கமான சில்ப சாஸ்திரத்தை முன்னோர்கள் எழுதியிருக்க வேண்டுமென்றுல் அவர்களுடைய திறமையை நாம் அறிந்து கொள்ளலாம். இது சில்ப சாஸ்திரத்தைப் பற்றிய விஷயமாயிற்று.

சங்கீதத்தை மிக அழகாகப் பாடுகிறார்கள். ஏன் அப்படிப் பாட வேண்டும்? நாம் நினைத்தபடியெல்லாம் பாடக் கூடாது. அதற்கென்று சில லக்ஷணங்கள் உண்டு. அப்படித்தான் பாட வேண்டும் என்பார்கள். ஆனுல் நமக்கு சாஸ்திரத்தின் லக்ஷணக் க்ரந்தம் தெரியாது. ஆனுல் லட்சியம் மாத்திரம் தெரிகிறது. யாராவது பாடும் பாட்டைக் கேட்டுவிட்டு மிகவும் நன்றுயிருக்கிறது, ராகம் இப்படித்தான் பாட வேண்டும் என்று நாம் கூறுவோம். சங்கீதத்தைப் போலில்லாமல் சில்ப சாஸ்திரத்திற்குப் பல நூல்கள் கிடைத்திருக்கின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவை ஸ்தபதிகளிடம்தான் இருக்கின்றன. நாம் அவர்களை சுத்த முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களும் நம்மைப் பெரிய முட்டாள்கள் என்றே கருதுகிறார்கள். ஸ்தபதிகளுக்கு (சமஸ்கிருத) மொழியின் அறிவு அவ்வளவுக்கு இருப்பதில்லை. ஆனால் அவர்கள் ஸ்லோகங்களுக்குச் சொல்லும் அர்த்தத்தை, நாம் நான்கு பேர் சேர்ந்தாலும், நம்மால் சொல்ல இயலாது. ஸ்தபதிக்கு அளவைகள் தெரிகின்றன. அளவையை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்றும் தெரிகிறது. நமக்கு அந்த இரண்டுமே தெரியாது. நமக்கு கஜம், முழம் போன்ற சொற்கள் தெரிந்திருக்கின்றனவே தவிர அவற்றின் நுட்பங்கள் தெரிவதேயில்லை. ஆனால் ஸ்தபதியானவன் அத்தகைய நுட்பங்களை யெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான்.

சிலையில் எவ்வளவோ வகைகளைச் சொல்கிறார்கள்! நமக்கென்ன தெரியும்! நாம் எப்பொழுதாவது கற்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறோமா? அதனால் அதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவன், ''இந்த கல்லினால் இந்த வகைச் சிலையைச் செய்யலாம். இந்த சிலையில் இவ்வளவு லக்ஷணங்கள் உண்டு'' என்று எல்லாவற்றிற்கும் சாஸ்திரத்திலிருந்து எடுத்துச் சொல்கிறான். இதே போல் 'ஆகமங்கள்' என்று சில இருக்கின்றன. இதில் அதிகமாக விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன. நகர நிர்மாணம் செய்வதெப்படி? கிராமத்தின் நிர்மாணம் எப்படி? ராஜப் பிரகாரங்களைக் கட்டுவதெப்படி? தேவப் பிரகாரங்களைக் கட்டுவதெப்படி? என்று எல்லாவற்றையும் மிக நுட்பமாக, விரிவாக அவற்றில் விவரித்திருக்கிறார்கள். சில்பிகள் யாராவது பார்த்தால் ''இது எங்கள் காஸ்யப சில்பக்ரந்தத்தை அனுசரித்துக் கட்டியது. இது எங்கள் மணிசில்பக்ரந்தத்தை அனுசரித்துக் கட்டியது'' என்று தீர்மானமாகச் சொல்லி விடுவார்கள். நாம் ''இது French சிற்பம், இது English சிற்பம், இது Russian சிற்பம்'' என்று சொல்வதைப் போல் ஸ்தபதிகள் ''இது இத்தகைய சிற்பத்தைச் சேர்ந்தது'' என்று பார்த்தவுடன் சொல்லி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விடுகிறார்கள். ஆனால் இதெல்லாம் சமஸ்கிருத பாஷையில் தான் இருக்கிறது.

நாம் வைத்திய சாஸ்திரம் என்று சொல்கிறோம். நமது வைத்திய சாஸ்திரம் என்னவோ மிகவும் இழிந்த நிலைமைக்கு வந்துவிட்டது. அது உண்மைதான்.

यस्य पक्षस्य यो राजा स पक्षः सुखमेधते ।

(எந்தக் கட்சியை அரசன் சேர்ந்துள்ளானோ அது செழிப் படைகிறது.)

எப்போதுமே உலகில் ஒரு நியதியைப் நாம் பார்க்கிறோம். ''எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ அவர்களைச் சேர்ந்த வர்கள் சுகமாக இருக்கிறார்கள்'' என்பதை நாம் பார்க் கிறோம். ''சமுதாயத்தில் எல்லோரும் பொய் சொல்லாமல் இருந்தால் உலகம் சரியாக போய்க் கொண்டிருக்கும்'' என்று ஒரு பட்சம்; ''நானே சத்யம் பேசுபவனாக நடந்துகொண்டு அதைப் பார்த்து நீங்கள் எல்லோரும் பின்பற்றி உலகம் க்ஷேமமாக இருப்பதைப் பார்க்க வேண்டும்'' என்பது இன் னொரு மனோபாவம். இன்றைய காலத்தில் ''சமுதாயத்தைத் திருத்தினால் உலகம் சுகமாக இருக்கும்'' என்ற கொள்கை யோடு சிலர் தம் சொந்த நலனுக்காகப் பாடுபடுகின்றனர். ஆனால் நம் முன்னோர்கள், சமுதாயத்திற்கு உபதேசங்களைக் கொடுக்காமல் தன் வரையில் ஒவ்வொருவரும் சரிவர நடந்து கொள்ள வேண்டும், அதனால் சமுதாயத்திற்கு நன்மை ஏற்படும் என்று தீர்மானத்துடனிருந்தனர். இத்தகைய ஒரு கொள்கை, நெருங்கிய உறவினனே நம்மை ஹிம்ஸிக்க வரும் இக்காலத்தில் தனி மனிதனாக இருப்பது உபயோகப்படாது. ''சமஷ்டியாக'' (மொத்தமாக) இருப்பதுதான் உபயோகப் படும். அது நம்மில் முன்பு அவ்வளவாக இருக்கவில்லை. நம் ஆசார அனுஷ்டானங்களுடன் இருந்த தேசம் வேறு நாட்ட வரின் ஆதிக்கத்திற்கு உள்ளாகி விடுதலையை இழந்தது. அதனால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''ஸர்வ: காந்தமாத்மீயம் பச்யதி''

(அனைவரும் பிரியமாயிருப்பவற்றைத் தங்களுடையவை எனக் கருதுகிறார்கள்.) என்பது போல் தன்னுடைய பொருள் என்றால் ஒருவனுக்கு மிகவும் வேண்டியிருக்கிறது. மற்றவனுடைய பொருள் என்றால் அது வேண்டாத பொருளாகி விடுகிறது. இது சாதாரணமாக இருக்கக் கூடிய இயல்புதான். அதனால்தான் வெளிநாட்டவர்கள் தம்முடைய விஷயங்களையே நிலைநாட்டிவிட்டு, நாம் ஆதரவற்றவர்களாக இருந்த போது நம்மை நன்றாக மட்டம் தட்டிவிட்டார்கள். நம்முடைய சாஸ்திர நூல்களையெல்லாம் தீக்கு இரையாக்கினார்கள். இப்போது நாம் அவற்றை அக்னி தேவனிடம் போய் கேட்கவும் போவதில்லை. அக்னிதேவன் அவற்றைச் சொல்லவும் போவதில்லை.

நம்மிடம் அர்த்தசாஸ்திரம் என்ற நூல் இருந்தது. அதில் ஒரு அரசன் எப்படி நாட்டை ஆளவேண்டும்? அரசனுடைய தர்மங்கள் என்ன? மக்களின் தர்மங்கள் என்ன? எத்தகைய தர்மங்களை அனுஷ்டித்தால் எல்லோரும் வளத்தோடு இருக்க முடியும் என்ற விஷயங்கள் எல்லாம் விவரமாகச் சொல்லப் பட்டிருந்தன. அப்படியே அர்த்தசாஸ்திரம், சில்ப சாஸ்திரம் வைத்திய சாஸ்திரம் முதலியவை இருந்தன. வைத்திய சாஸ்திரம் எப்படி இருந்தது என்பதற்கு இப்பொழுது கூட உத்தமமான ஆயுர்வேத மருத்துவ முறையைப் பார்க்கிறோம். தர்க்க சாஸ்திரத்தை 10 வருடம் அத்யயனம் செய்தாலும் நமக்கு கிடைக்கும் மதிப்பு மிகவும் குறைச்சல்தான். ஆனால் 'Law' படிப்பை 4 வருடம் படித்தாலும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பரிசு மிகவும் பெரிதுதான். இதிலிருந்து உலகத்தின் இயற்கை என்னவென்று தெரிகிறதென்றால் சுலபமாக இருக்கக் கூடியதை விட்டுவிடுகிறார்கள். அப்படியாக இந்த சாஸ்திரங்கள் மலினமாகப் போய்விட்டன. ஆனால் ஆயுர்வேதத்தில் இன்றும் மஹாநிபுணர்கள் இருக்கிறார்கள். அதற்காக இந்த 'Alopathy'யோ 'Homeopathy'யோ உபயோகம் இல்லை என்று சொல்லவில்லை. தாராளமாக

Sri Vidyadhiraja Book Centre, Tirupati

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மஹிமை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நம்முடைய சாஸ்திரம் ஒரு நிலையில் நின்றுபோய் விட்டது. அதற்கு அரசனின் ஆதரவு இல்லாமல் போய்விட்டது. அதுவே காரணம். வீடுகளில் மருந்துகளைச் செய்து கொடுத்தவர்கள் வீடுகளில் செய்து கொடுப்பதோடு நின்றுவிட்டார்கள். போதும் என்று அவ்வளவுடன் நிறுத்திக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் அதை வளர்த்துவிட்டிருப்பார்களானால், இப்பொழுது எந்தக் குதிரை பலமுள்ளது, எந்தக் குதிரை பலமில்லாதது என்று பார்க்கவேண்டியிருக்குமே தவிர ஆயுர்வேதம் என்ற குதிரையைக் கட்டிப் போட்டுவிட்டு Alopathy அல்லது Homeopathy என்ற குதிரைகளை ஓடவிட்டு, இந்தக் குதிரைதான் ஜெயித்தது என்று அவற்றிற்குப் பரிசு கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. இப்போதாவது ஆயுர்வேதம் என்ற குதிரையைக் கட்டிப் போடாமல் அதைப் பேணி வளர்த்து ஓட ஏற்பாடு செய்தால் இந்தக் குதிரையும் ஓடும். பார்க்கப் போனால் இந்தக் குதிரை கொஞ்சம் அதிகமாக ஓடியிருக்கக்கூடும். நாம் பார்ப்பது ஏதோ ஒன்று. எனக்கு மிகவும் தெரிந்த அன்பர் ஒருவர் பழைய ஆராய்ச்சிப் புத்தகம் ஒன்றை வெளியிட்டார். ஆனால் அவர் நன்கு பிரயத்தினப்பட்டும் அவருக்கு அந்தப் பழைய மொழி பிரயோகங்கள் மறந்துவிட்டிருந்ததனால் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்த விஷயங்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஏன் அவருக்கு அவ்வாறு மறந்து போயிற்று? முன்பே சொன்னது போல் நம் குதிரையைக் கட்டிப்போட்டு விட்டார்கள். அன்னியர்களின் குதிரை ஓடிக் கொண்டேயிருந்ததால் நம் குதிரையை ஓட்டுவார்களா? நம் குதிரையிலிருந்து அவர்கள் வேண்டியதை எடுத்துக்கொண்டு பிறகு அதை அப்படியே கட்டிப்போட்டு விட்டார்கள். அப்படியே ஆயுர்வேதம், சில்ப சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம் முதலிய அனைத்தும் சீர்குலைந்தன. பண்டைய மஹரிஷிகள் நூல்களை எழுதும்போது ''நானே இதை எழுதினேன்'' என்று சொல்லவில்லை. ''பழைமையான நூல்களைப் பார்த்துத்தான் எழுதினேன்'' என்றே கூறியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே எழுதியவர்களே ''பல

CC-O. In Public Domain. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பழைய க்ரந்தங்களைப் பார்த்து எழுதியிருக்கிறோம்'' என்று சொன்னால் அது எவ்வளவு புராதனம் என்று தெரிகிறது! அதுமட்டுமில்லை; தனூர் வேதம் இருக்கிறது. நளபாகம் என்ற நூலும் இருக்கிறது. அது இப்பொழுதும் கிடைக்கிறது. அதில் எப்படி அழகாக வேக வைத்து சமையல் செய்யலாம் என்றிருக்கிறது. எதனுடைய மாமிசத்தை மிகவும் ருசியாக இருக்கும் என்று கூட நளன் எழுதியிருக்கிறான். அது மட்டுமில்லை, அல்பமாக இருக்கக்கூடிய அந்த விஷய போகங்கள் குறித்துக் கூட அந்த வாத்ஸ்யாயன மஹரிஷி எழுதிவிட்டார். இவ்வாறு எந்த விதத்தில் நமது முன்னோர்கள் குறைந்து போனார்கள் என்றால் ஒன்றிலுமே அவர்கள் குறைந்துபோகவில்லை.

எனக்கு சிஷ்யனான ஒரு இத்தாலிய நாட்டுக்காரன் ஒரு சமயம் என்னிடம் வந்திருந்தான். அவனுக்கு சமஸ்கிருத மொழியில் வார்த்தை ஒன்று கூடத் தெரியாது. ஆனால் அவன் பஞ்சதசீ என்னும் நூலிலுள்ள ஒவ்வொரு சுலோகத்திற்கும் அர்த்தம் என்ன என்று தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு முறை யாரோ ஒருவர் அதற்கு செய்திருந்த மொழி பெயர்ப்பைக் காட்டி ''இந்த குறிப்பிட்ட சுலோகத்திற்கு பொருள் சரியாக இல்லையே? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்'' என்று என்னிடம் கேட்டான். நானும் அந்த சுலோகத்தைப் பார்த்து, ''ஆமாம் பொருள் சரியாகத்தான் இல்லை'' என்று சொன்னபோது ''அதன் சரியான தாத்பர்யம் என்ன'' என்று அவன் கேட்க, நான் அதைச் சரி பார்த்து ''இது தாத்பர்யம்'' என்று சொன்னேன். அதற்கு அவனும் ''இது தான் எனக்கும் சரி எனப்படுகிறது. யாரோ இப்படித் தவறாக மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார்களே? இவ்வாறு செய்யலாமா என்று கேட்டான் ''ஆமாம் இது சரியாகத்தான் இல்லை. மொழி பெயர்ப்பை நீ விட்டுவிடு. நான் சொல்வது உனக்கு சரியாய் இருந்தால் நீ அதை எடுத்துக் கொள்'' என்று சொன்னேன். ஆகவே மொழி பெயர்ப்புக்களில் சில தவறுகளும் இருக்கலாம். மொழி பெயர்ப்பாளனின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கண்ணோட்டத்தைப் பொருத்துத்தான் அவனுடைய மொழி பெயர்ப்பே அமையும். சிலர் வேதங்களுக்கு அர்த்தம் சொல்கையில் அவற்றை இதிஹாசமாகக் கருதுகிறார்கள். இன்னும் சிலரோ அதை ஆத்யாத்மிக நூலாக கருதுகிறார் கள். இன்னும் சிலரோ அதை யக்ஞங்களின் நோக்கிலிருந்து பார்க்கின்றனர். இவ்வாறு வேதத்திற்கு அர்த்தம் சொல்வ தற்கு யாரைப் பிரமாணமாகக் கருதுகிறோமோ அந்த வியாசரே சொல்லிவிட்டிருக்கிறார்.

ஒரு திடகாத்திரமான மனிதனைப் பார்த்தால் ஒரு புலிக்கு என்ன தோன்றும். ''இவன் ஓர் அருமையான உணவு'' என்று தோன்றும். அதே சமயம் அந்த திடகாத்திர மனிதரின் பிள்ளைக்கு, ''தன் தந்தை எவ்வளவு திடகாத்திர மாக உள்ளார்'' என்று தோன்றும். அந்தத் திடகாத்திர மனிதனுடைய எதிரிக்கு ''என்னுடைய தலையெழுத்து சரி யில்லை. இவன் நம்மை என்ன செய்துவிடுவானோ?'' என்று தோன்றும். அதனால் ஒவ்வொருவர் நோக்கிலிருந்து ஒவ் வொரு மாதிரி தெரிகிறது. புலிக்கு சாப்பாடாகத் (உணவா கத்) தெரிந்தது. பிள்ளைக்கு தந்தையாகத் தெரிந்தது. எதிரிக்கு அவன் பயத்தை உண்டாக்கினான். அதனால் வேதத்தை நாம் பரிசீலிக்கும்போது எந்த நோக்கிலிருந்து மொழி பெயர்த்தவர்கள் பார்த்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பாணினி போன்றவர்கள், ''வைதீக வார்த்தைகளுக்கு ஸ்வரூபம் என்ன?'' என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். அதன்படி நாம் பார்த்தால் அந்த ஒரு பாஷ்யமும் (விரிவுரையும்) சரியானதாக இருக்கும்.

பழைய கன்னடம், புதிய கன்னடம் ஆகிய இரண்டில் புதிய கன்னடத்தை நாம் அணுகும் முறையில் பழைய கன்னடத்தையும் அணுகினால் அது எப்படிச் சரியாகும்? பழைய கன்னடத்திற்கு என்று ஓர் இலக்கணம் இருக்கிறது. அதன்படி அதை அணுகினால்தான் சரியாக வரும். பார்ப்ப தற்குப் பழைய கன்னடமும், தமிழும் ஒரேபோல்தான் தெரி கிறது. அதனால் தமிழ்த்தப்பாக இலக்கணம் என்ன

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். வெறும் மொழி பெயர்ப்புக்களுக்கு மட்டும் நாம் மாறிக் கொண்டிருந்தால் அது சரியான தர்மம் ஆகாது. அதனால் நாம் நம்முடைய அவசிய நூல்களை பார்க்கும்போது நம்முடைய ஸம்ஸ்காரத் திற்கு ஏற்றபடி நாம் பார்க்க வேண்டும். ஸம்ஸ்காரங்களுக்கு ஒவ்வாத நோக்கிலிருந்து நாம் பார்த்தால் அது விபரீதமாகி விடும். யாரோ, ''காசி எங்கேயிருக்கிறது?'' என்று வடக்கி லிருந்த ஒருவன் கேட்டபொழுது, ''நேராகத் தெற்குத் திக்கை நோக்கி போ'' என்றார் ஒருவர். அவன் நேராக தென் சமுத்திரக் கரைக்கு வந்துவிட்டான். அங்கே வந்து ''விஸ்வேஸ்வரர் ஆலயம் எங்கே?'' என்று கேட்டானாம். அப்பொழுது அங்கேயிருந்தவர், ''இங்கே விஸ்வேஸ்வரர் ஆலயமும் இல்லை; கங்கையும் இல்லை. இங்கே ராமேஸ்வரர் ஆலயம்தான் உண்டு'' என்றாராம். அந்த விதமாகத்தான் நம் பாவனைகள் போய்க் கொண்டிருக்கின்றன. அதனால் நாம் நம் பழமையை அறிந்துகொள்ள வேண்டுமென்றால், நம் முடைய சிறப்பை தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அல்லது நம் மூட்டாள்தனத்தைத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றாலும் நம் பழமையான க்ரந்தத்தை நாம் படிக்கத்தான் வேண்டும்.

நாம் அவற்றைப் படிப்பதற்காக முதலில் சமஸ்க்ருதத் தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் சொல்வேன். தேவ மொழியான சமஸ்க்ருதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் நாம் தேவலோகத்திற்குச் செல்லவேண்டிய தில்லை. நாம் பாரதீயர்களாக வாழவேண்டுமென்றால், நாம் பாரதீய காலாச்சாரத்தை நன்கு தெரிந்துகொள்ளவேண்டு மென்றால், அதற்காக பெருமைப்பட்டுப்கொள்ள வேண்டு மென்றால் சமஸ்க்ருத மொழியைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

''திக்ஷ்வதீகாசான் கரோதி''

(அவன் (யோகசாஸ்யின்) திசைகளில் ஜன்னல்களை ஏற்படுத்துகிறான்)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''கோ ஹி வேத | யத்யமுஷ்மின்லோகேऽஸ்தி
வா ந வா''

(மறு உலகம் உள்ளதா, இல்லையா என்பது யாருக்குத் தெரியும்.)

(இந்த வாக்கியம் அர்த்தவாதம் ஆகும். ஸ்வர்க்கம் இருக்கிறதா என்று பார்ப்பதற்காக ஜன்னல் அமைக்கப்படுகிறது என்று அது கூறுகிறது.)

என்று வேதமே ஓரிடத்தில் சொல்கிறது. இது என்ன? இங்கு சொல்லப்பட்டிருப்பவை போன்ற சம்பந்தங்கள் உண்மையில் இருக்கின்றனவா? இல்லையா? என்று கேட்டால், அதன் தாத்பர்யம் அப்படியல்ல. அதற்கு அர்த்தவாதம் என்று பெயர். அர்த்தவாதம் செய்யப்படும்போது மேலெழுந்தவாரியாக உள்ள பொருளைப் பார்க்காமல் உள்ளே இருக்கும் பொருளைப் பார்க்க வேண்டும். பரலோகத்தைப் பற்றி மட்டுமல்லாமல் இந்த உலகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானாலும்கூட அவசியமாக வேதத்தைக் கற்க வேண்டும். இதைக் கற்றுக் கொள்ளாவிட்டால் நாம் ''நம் ஸ்வரூபத்தையே'' தெரிந்துகொள்ள முடியாது. அதனால் நாம் சமஸ்கிருதத்தை அவசியம் கற்க வேண்டும்.

ஒருவன் (வெளிநாட்டுக்காரன்) மீசையை வைத்துக் கொண்டு வந்தான். அவனைப் பார்த்துப் பழகி நாமும் மீசையை வைத்துக் கொண்டோம். ஒரு நாள் அவன் ஒரு பக்கம் மட்டும் மீசையை வைத்துக்கொண்டு வெளியில் வந்தான். நாமும் அடுத்த நாள் ஒரு பக்கம் மீசையை வைத்துக் கொண்டு வந்தோம். இப்படியொரு நிலைமையாகிவிட்டால், யாராவது நம்மைப் பார்த்து சன்னத்தில் அடித்தால் நாம் அதை வாங்கிக்கொள்ள வேண்டியதுதான். இப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது. மற்றவன் செய்வதை நாமும் செய்யலாம். ஆனால் மற்றவன் செய்வதையெல்லாவற்றையுமே நாம் செய்யக்கூடாது. ஏனென்றால்

Sri Vidyabharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''மூட: பரப்ரத்யயனேயபுத்தி: | ''

(மூட்டாளானவன் மற்றவர்களுடைய சித்தனைகளால் இழுத்துச் செல்லப்படுகிறான்.)

என்ற நிலைமை வந்துவிடும். நம் சமஸ்கிருதத்தைக் கற்றுத் தான் ஆக வேண்டும். ஆனால் சிலர் ''சமஸ்கிருதம் முழுவதும் ப்ராஹ்மணர்களுக்குத்தான். மற்றவர்களுக்கு அதில் என்ன இருக்கிறது'' என்பார்கள். அதற்குப் பதிலைப் பின்வருமாறு கூறலாம். பௌத்தர்களின் நூல்கள் எல்லாமே சமஸ்கிருதத்தில் இருப்பவை. அவையெல்லாம் பெரிய சாஸ்திரங்களாக இருக்கின்றன. எவ்வாறு நம் சாஸ்திரங்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் இருக்கின்றனவோ அதே போல் அவர்களுக்கு (பௌத்தர்களுக்கு) தர்க்க சாஸ்திரமும் அவ்வாறே இருக்கின்றது. பௌத்தர்களுக்கு நீதி சாஸ்திரமும் இருக்கிறது. அவைகள் எல்லாம் பாலி என்ற பாஷையிலும் இருக்கின்றன. ஆனால் உத்தமமான வாதங்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில்தான் இருக்கின்றன. ஜைனர்களின் நூல்கள் ப்ராக்ருத பாஷையிலும் இருக்கின்றன. ஆனால் அதை விட அதிகமாக இருக்கும் மார்த்தாண்டம் போன்ற நூல்கள் உத்தமமான சமஸ்கிருத பாஷையில்தான் இருக்கின்றன. அதை யாரும் இல்லை என்று மறுக்க முடியாது.

. தமிழைப் பற்றிச் சொல்லும்போது தமிழுக்கும், சமஸ்க்ருதத்திற்கும் எத்தனிதமான சம்பந்தமுமில்லை என்று சிலர் தீர்மானமாகச் சொல்கிறார்கள். மிகவும் சுவாரஸ்ய மாக இருக்கிறது அதைக் கேட்டால். இது எப்படி இருக்கிறது என்றால் சூரியனைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இது என்ன? இவ்வளவு இருட்டாய் இருக்கிறது; ஒன்றுமே தெரிய மாட்டேன் என்கிறது' என்று சொல்வதைப் போல அபத்த மாக இருக்கிறது. இன்று இவ்வளவு அலங்காரங்கள், சாகித்யங்கள், த்வனிகள், மேலும் ரஸங்கள் இவைகளெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அநாதி காலமாக வந்திருக்கக் கூடிய அகத்தியர் தொல்காப்பியர் நன்னூல் இவைகளைத் தான் தமிழிலும்

CC-O. Vidyasagar Study Circle, Chennai. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வந்திருக்கின்றன. மேலும் மலையாள மொழியைப் பார்க்கும் பொழுது பின்வரும் மேற்கோள் நினைவுக்கு வருகிறது.

''ஸம்ஸ்க்ருதஹிமகிரிகலிதா
த்ராவிடபாஷாகாலிந்தஜா மிலிதா |
தேசியசப்தஸம்யுக்தா கேரள பாஷா கங்கா ஜயதி ||''

(சமஸ்கிருதம் என்னும் இமயத்திலிருந்து தோன்றி, தமிழ்மொழியென்னும் யமுனையுடன் கலந்து பிராந்தியச் சொற்களோடு சேர்ந்து கேரள மொழியென்னும் கங்கை வெற்றியுடன் திகழ்கிறது.)

உள்ள விஷயத்தைச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? ஏனென்றால் அவர்களே இவ்வாறு சொல்கிறார்கள். கேரள பாஷை சமஸ்க்ருதம் என்ற ஹிமய பர்வதத்திலிருந்து புறப்பட்டதாம் வெகு வேகமாக. நடுவில் திராவிட பாஷை எனப்படும் தமிழ் அதில் கலந்தது. தேசிய ரூபமாக இருக்கப் பட்ட பாஷை சரஸ்வதி வடிவில் அதுவும் வந்து சேர்ந்து கொண்டது நடுவில். இவ்வாறுக அந்த ஸ்லோகத்தில் வ்யாக்யானம் செய்கிறார்கள். இன்றைய கேரள பாஷைகூட கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கக்கூடியது. இவ்வாறுக எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாக இருந்துகொண்டு நம் தர்மத்திற்கு மூலமாக இருந்துகொண்டு நமது கலாச்சாரத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய இந்த சமஸ்க்ருத பாஷையில் எல்லோரும் கவனத்தைச் செலுத்த வேண்டும். மேலும் இது யாரோ ஒருவருக்குச் சேர்ந்த சொத்து என்றால் அதை நான் என்றுமே ஒப்புக்கொள்ளமாட்டேன். இது எல்லோருக்கும் சேர்ந்த சொத்து. அதனால் இந்த மொழியை எல்லோரும் கற்று அத்யயனம் செய்யவேண்டும். அத்யயனம் செய்து அந்த பாஷையில் இருப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதனால் நம் தேசத்தின் கௌரவத்தை மேன்மை படுத்துங்கள்! நம் தேசத்திற்கு ஒரு பாஷை இல்லை என்று செய்யாதீர்கள். நம் நாட்டிற்கு ஒரு கலாச்சாரம் இல்லை என்று செய்யாதீர்கள். நமக்கு கௌரவம் இருக்கிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நமக்கு பாஷை இருக்கிறது. நமக்கு கலாச்சாரம் இருக்கிறது என்று சொல்லி நாம் இந்த தேசத்திற்கு மேன்மை உண்டு பண்ண வேண்டும். நான் எப்பொழுதும் ஒரு கவலையுடன் இருக்கிறேன். ஏனென்றால் தேசத்திற்கு ஒரு பாஷை இல்லை. தேசத்தில் ஒரு ஒற்றுமையில்லை. எப்பேற்பட்ட தேசமிது! அல்லல் படுவதற்குத்தான் பரமாத்மா இந்த தேஹத்தை சிருஷ்டித்தாரா! அல்லல் படுவதற்காகத்தான் நாம் பிறந்திருக்கிறோமா? இது என்ன பரமாத்மாவின் லீலை. இனிமேலாவது ஜனங்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டுபண்ண மாட்டாயா? பகவானே! நம் முன்னோர்கள் இந்நாட்டில் ப்ரார்த்தனை செய்தது என்னவென்றால்

''ஆஸேதோராஹிமாசலம் ஸர்வேஷாம் மஹாஜனனம்''

(இமயம் முதல் சேது வரையிலுள்ள அனைத்துப் பெருமக்களுடைய.....)

என்றே பிரார்த்தித்தார்கள்.

கர்நாடகத்தில் ஒரு விஸ்வேஸ்வரர் ஆலயத்தை நிர்மாணித்திருக்கிறோம் என்றால் அது இமயத்திலிருந்து தென்னாட்டிலுள்ள ராமேஸ்வரம் வரை உள்ள எல்லோருக்கும் பொதுவானதுதான். கர்நாடகத்தில் இருக்கும் மக்களுக்குத்தான் என்பதில்லை. நாம் தஞ்சாவூருக்குப் போனாலும் அங்கும் இதே பிரார்த்தனையைத்தான் செய்கிறோர்கள். பஞ்சநதி தீர்த்த க்ஷேத்திரத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் புண்ணியம் கிட்டட்டும் என்று அவர்கள் பிரார்த்தனை செய்யவே இல்லை. நம் முன்னோர்கள் நம் உள் மனதில் எத்தகைய பாவனையை உண்டுபண்ணியிருக்கிறார்கள் என்று பார்த்தால் மிகவும் ஆச்சர்யமாக உள்ளது. இந்தக் காலத்தில் ஒற்றுமை, ஒற்றுமை என்று சொல்லி பலவிதமான மதங்களை உண்டுபண்ணி நாட்டின் ஒற்றுமையைக் குலைத்து சுய நலத்தை மட்டும் வளர்த்துக்கொண்டு நாட்டைத் துண்டு துண்டாக மாற்றி ''ஆஹா! இந்த தேசத்தை எவ்வளவு நன்றாக உண்டு பண்ணியிருக்கிறோம்'' என்று இப்போது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சொல்லிக்கொள்பவர்களைப்போல் நம் முன்னோர்கள் இருக்க வில்லை. ஒரு பஞ்சாபி 'நான் ராமேஸ்வரத்திற்குச் சென்றேன். ராமநாதரின் திவ்ய தரிசனம் பெற்றேன். எனது ஜன்மம் பயனுறும்' என்று பெருமைப்பட்டு சொல்கிறான். நம் ராமநாதரின் கோயில் மிகப் பெரியது. அந்த விஸ்வநாதரின் லிங்கம் மிகச் சிறியதாக உள்ளது. இது போன்ற அளவுகளையெல்லாம் நாம் பார்ப்பதேயில்லை. வாழ்க்கையில் ஒருமுறையாவது காசிக்குச் சென்று அந்த விஸ்வநாதரின் மேல் கங்காஜலத்தை நாம் கொட்டினால் அதுவே பிறவிப் பயன் என்றுதான் நாம் கூறுகிறோம். ''இவ்வளவு பெரிய கோயிலை இங்கே வைத்துக்கொண்டு அங்கே உள்ள சிறிய லிங்கத்தின் மேல் ஜலத்தைக் கொட்டினால் நம் ஜன்மம் பயன்பெறுமா?'' என்று நாம் யாராவது கேட்க முடியாதபடி நம் முன்னோர்கள் நம் மனத்தில் எண்ணத்தை உண்டுபண்ணி விட்டார்கள். அவர்கள் ''நீ இங்கிருந்து அங்கேபோய்தான் விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். அது நம் முடைய கடவுள்'' என்றார்கள். அதே போல் அங்கிருப்பவன் ''அங்கிருந்து இங்கு வந்து ராமநாதரைத் தரிசனம் செய்யத் தான் வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்குப் புண்ணியம்'' என்றார்கள். அதற்காக நாம் இங்குள்ள கடவுளை விட்டுவிடவில்லை. இதுவும் நம்முடைய கடவுள்தான். ஆனால் அங்கே போய் தரிசனம் செய்தால்தான் அதில் ஒரு திருப்தி கிடைக்கிறது. எத்தகைய மேலான பாவனையை நம் முன்னோர்கள் நம் மனதில் உண்டுபண்ணிவிட்டார்கள் பார்த் தீர்களா? பிறகு சங்கர பகவத்பாதாள் காலடியில் பிறந்து நாடெல்லாம் பயணம் செய்து மடங்களையெல்லாம் ஸ்தாபித் தாரே! நம்முடைய மதத்தை அவர் தூய்மைப்படுத்தினார். எப்படி? நான் இப்பொழுது கூட சொல்வேன் பகவத்பாதாள் செய்த செயல்களை நாம் செய்வதற்கு எங்கே முடியப் போகிறது? பகவத்பாதாள் அவ்வாறு என்ன செய்தார்? நம் பாரததேசத்தை முழுக்க அவர் சுற்றியுள்ளார். சிலர் ''இதென்ன பெரிய காரியமா?'' ஒரு காகம்கூடத்தான் சுற்றி வருகிறது என்பர். அப்படி என்றால் சங்கராச்சார்யாரை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விட அந்தக் காகம்தான் பெரியதா என்றால் கருத்து அதுவல்ல. சங்கராச்சார்யார் சுற்றியதில் பெரிய விஷயம் இருக்கிறது. அதனால் அவர் பெரியவர்தான். அந்தக் காலத்தில் ரயில் இருக்கவில்லை, மோட்டார் இருக்கவில்லை, ஏரோப்பிளேன் இருக்கவில்லை. எங்கெங்கோ சுற்ற வேண்டியிருந்தது. இப்பொழுது அப்படியெல்லாம் சுற்ற முடியாது. அவர் குறைந்த பட்சம் இரண்டு முறை சுற்றி வந்துவிட்டார். இரண்டு முறையல்ல இருபது முறை கூட ஒரு காகம் சுற்ற முடியும். அதனால் அது சங்கராச் சார்யாரை விட பெரியவராகிவிட முடியுமா? சுற்றியதில் வித்யாசம் என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். அவர் மனது எவ்வளவு விசாலமடைந்து இருந்தது என்று பார்க்கும் போது ஆச்சர்யமாக உள்ளது. இப்பேற்பட்ட விசாலமான மனப்பான்மை உடைய மஹரிஷிகளின் பரம்பரையில் தோன்றியவர்கள் நாம். அப்படியிருக்கையில் நான் தமிழன், நான் கன்னடன், நான் மலையாளத்தவன், நான் குஜராத்திக் காரன் என்ற வித்யாசமான மனப்பான்மையை விடுத்து நாம் தேச ஒருமைப்பாட்டை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். நம் பாஷையையும் சரியாகக் கற்றுக் கொள்ளாமல் சமஸ்கிருதத்தையும் துவேஷித்து நாட்டையும் அழித்து நாம் எந்த விதமான லோகத்தை அடையப் போகிறோம் என்று தெரியவில்லை. இவ்வாறு இருக்காமல், நாட்டின் ஒற்றுமையை மனதில் கொண்டு நாமும் நற்கதி அடைந்து சிரேயஸை அடைய வேண்டும் என்று சொல்லி இந்த அருளுரையை முடிக்கிறேன்.

ஹர நம: பார்வதிபதயே!
ஹர ஹர மஹாதேவ!!
ஜானகீகாந்தஸ்மரணம்!
ஜய ஜய ராம ராம!!

———

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri